**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS.No. 124/2024**

**02.09.2025**

**P.W.1 - கலைச்செல்வி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது நிரூபண வாக்குமூலத்தில் விபரங்கள் தெரியும். பிரதிவாதி எங்கு வைத்து புரோநோட்டை எழுதி கொடுத்தார் என நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அய்யனார்குளத்தில் உள்ள என்னுடைய வீட்டில் வைத்து எழுதி கொடுத்தார். பிரதிவாதிகள் 3 பேரும் ஒரே நேரத்தில் புரோநோட்டை எழுதி கொடுக்கும்போது இருந்தார்கள். பிரதிவாதிகளை தவிர்த்து எனது கணவர் இருந்தார். 06.07.2021ம் தேதி காலை 11.00 மணியளவில் புரோநோட்டில் கையெழுத்து செய்தார்கள். 1ம் பிரதிவாதியின் மீது மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.62-2024 ஈடுகடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஈடுகடன் பத்திரத்திற்கு ஆதரவாகத்தான் தாவா புரோநோட் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் பிரதிவாதி வந்து புரோநோட்டை எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.
ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.02 16:11:24 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.